EXAMS DAILY தமிழ்

# நவம்பர் 2 நடப்பு நிகழ்வுகள்

**தேசிய செய்திகள்**

**மகாராஷ்டிரம்**

**ஐ என் எஸ் விராட் [INS Viraat] ஒரு மிதக்கும் அருங்காட்சியகமாக மாற்றத்திட்டம்**

- மகாராஷ்டிர அமைச்சரவை, ஐ.என்.எஸ்.விராட் என்ற கப்பல் ஒரு மிதக்கும் அருங்காட்சியகமாக மாற்ற அனுமதி அளித்தது. இது மார்ச் 2017 ல் கப்பற்படையிலிருந்து நீக்கப்பட்டது.
- 852 கோடி ரூபாய் செலவில் பொது-தனியார் கூட்டுறவு (PPP) மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

**புது தில்லி**

**மைக்ரோ, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆதரவு திட்டம்**

- பிரதம மந்திரி நரேந்திர மோடி புதுதில்லியில் மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) ஆதரவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- எம்எஸ்எம்இ ஆதரவுத் திட்டம் நாடு முழுவதும் 100 நாட்களுக்கு 100 மாவட்டங்ளில் இயக்கப்படும்.

**நான்கு புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பதவியேற்பு**

- நீதிபதிகளான ஹேமந்த் குப்தா, ஆர். சுபாஷ் ரெட்டி, எம்.ஆர். ஷா மற்றும் அஜய் ரஸ்தோகி ஆகியோர் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி ஏற்றனர். இதன் மூலம் மொத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 28 ஆக உயர்வு

**சர்வதேச செய்திகள்**

**வெளிநாட்டு தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் ஜப்பான் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**

- ஜப்பான் அமைச்சரவை நீண்ட கால தொழிலாளர் பற்றாக்குறையை எதிர்கொள்ள நாட்டில் நிறைய நீல காலர் வெளிநாட்டு தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் வரைவு மசோதாவிற்கு ஒப்புதல்.

### உலகப் போர்களில் சண்டையிட்ட இந்திய வீரர்களுக்கு புதிய நிதியுதவியை அளிக்க UK திட்டம்

- பிரிட்டனுக்காக இரண்டு உலகப் போர்களின்போது போராடிய இந்திய வீரர்களுக்கு ஆதரவு வழங்குவதற்கான திட்டங்களை UK அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

## அறிவியல் செய்திகள்

### சீனா புதிய உயர் சுற்றுப்பாதை செயற்கைக்கோளை அறிமுகப்படுத்தியது

- சீனா வெற்றிகரமாக உள்நாட்டிலேயே தயாரான பெய்டௌ [BeiDou] உலகளாவிய செயற்கைக்கோள் நேவிகேஷன் அமைப்பான உயர் சுற்றுப்பாதை செயற்கைக்கோளை அறிமுகப்படுத்தியது. பூமியின் மேலே 36,000 கி.மீ., உயரத்தில் நிலை நிறுத்தப்பட்ட முதல் பெய்டௌ [BeiDou] -3 செயற்கைக்கோள் இதுவேயாகும்.
- இது அமெரிக்க ஜி.பி.எஸ் அமைப்பு, ரஷ்யாவின் GLONASS மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கலீலியோ ஆகியவற்றிற்குபின் வரும் நான்காவது உலகளாவிய செயற்கைக்கோள் நேவிகேஷன் அமைப்பு ஆகும்.

## வணிகம் & பொருளாதாரம்

### ஜி.எஸ்.டி. சேகரிப்பு ரூ .1 லட்சம் கோடியைக் கடந்தது

- கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டது முதல், சரக்குகள் மற்றும் சேவை வரி வசூல், இரண்டாவது முறையாக ஒரு லட்சம் கோடியை கடந்தது. 2018 அக்டோபரில் சேகரிக்கப்பட்ட மொத்த ஜி.எஸ்.டி. வருவாய் 1 லட்சம் 710 கோடி ரூபாய் ஆகும்.

## மாநாடுகள்

### கடற்படை தளபதிகளின் மாநாடு

- இந்த ஆண்டின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கடற்படை தளபதிகள் மாநாட்டின் இரண்டாவது பதிப்பு புது டெல்லியில் முடிவடைந்தது.

## ரோம் திரைப்பட விழா

- ரோம் திரைப்பட விழாவின் வீடியோசிட்டே 2018ல் இந்திய அரங்கு தொடங்கப்பட்டுள்ளது. விர்சுவல் ரியாலிட்டி, வீடியோ கேமிங், அனிமேஷன், திரைப்பட உருவாக்குதல் ஆகியவற்றை மையமாக கொண்ட நிகழ்ச்சிதான் இந்த வீடியோசிட்டே.

## திட்டங்கள்

### அடல் ஓய்வூதிய திட்டம்

- ஒரு கோடி 20 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் அடல் ஓய்வூதிய யோஜனாவில் இணைந்துள்ளனர்.
- உத்தரபிரதேசம், பீகார், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்கள் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் முதன்மையான பங்களிப்பாளர்களாகும்.
- 18 முதல் 40 வயது வரை உள்ள அனைத்து இந்திய குடிமக்களுக்கும் இந்த திட்டம் கிடைக்கிறது. இதன் கீழ், சந்தாதாரர்கள் 60 வயது முதல் ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் 1000 ரூபாய் 5000 ரூபாய் ஓய்வூதியம் பெறமுடியும்.

**Join Us on FB :**

**For English – [Examsdaily]** **For Tamil – [Examsdaily Tamil]**

**For WhatsAPP Group - [Click Here]**